Regd. No. 2975 ஸ்ரீ

ஸ்ரீ ராமாநுஜன்-383

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர், மஹாவித்வான்

SRI RAMANUJAN

Editor:

Mahamahimopadhyaya

P. B. ANNANGARACHARYA, Kanchipuram-631503.

வருட சந்தா 10

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீவாரெம்பெருமானார் ஜீயர்
திருவடிகளே சரணம்.

...ள் பெருந்தேவித்தாயார்
...வடிகளே சரணம்.

Released by Maran's Dog ,Toronto, Canada

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

ரௌத்ரி ஸூ ஆனிமீ

acharya.org

ஸ்ரீ ராமாநுஜன் - 383

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சி மஹாவித்வான் **P. B.** அண்ணங்கராசாரியர்

தொகுதி 33 | ரௌத்திரி ஆனி, ஆடி மீ 1980 ஜூலை மீ | பகுதி 2

—பத்ராதிபரின் குறிப்பு—

ஸ்ரீமான் உ வே K. V. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியின் மறைவு

இந்த மஹாஸ்வாமியைக் கேள்விப்படாதவர்கள் எத்திசையிலும் இருக்கமாட்டார்கள். இவர்க்கு 'ஆடிடர் நரஸிம்ஹாசாரியார்' என்றே திருநாமம் வழங்கிவந்தது. அந்தத் துறையில் இவர் மஹாமேதாவியாக விளங்கி வந்தார். மஹாதனிகருமாவர். இந்த மஹநீயர் நேற்றைய ஜூன் மாத முடிவில் சென்னையில் தமது க்ருஹத்தில் ஆசாரியன் திருவடிகளை யடைந்தார். ஏறக்குறைய இரண்டு வருஷகாலம் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருந்தார். பெரும்பாலும் ஞாபகங்கூட இல்லாமலிருந்தது. இவருடைய மறைவு ஆஸ்திகவுலகுக்கெல்லாம் அத்யந்தம் சோசநீயமானது. "பரமதார்மிகர், மஹாதார்மிகர், மஹோதாரர்" என்றேஇவரை வழங்கிவந்தார்கள். இந்த ஸ்வாமியால் வாழ்ந்தவர்கள் பலர் என்பது ஒரு புறமிருக்க, பல திவ்யதேசங்களில் இவருடைய கைங்கரியங்கள் சிறப்புற நடைபெற்று வந்தன இறந்த காலமாக எழுதாமல் "நடைபெற்று வருகின்றன" என்று நிகழ்காலமாகவே எழுதத்தகுதியுண்டு. அவருடைய உறவினர்கள் ஷை கைங்கரியங்களில் எதையும் நிறுத்தாமலும் அபிவிருத்தியாகவும் நடத்தி வருவது மெச்சத்தக்கது. K. V. நரஸிம்ஹன் & Co என்பது பலவூர்களில் விளங்கும். ... ...

acharya.org

ஸ்தோத்ர ரத்ந ச்லோகரத்நமொன்று

(பத்ராதிபர்)

நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் எண்ணிறந்த ஸ்தோத்ரங்கள் அவதரித்திருந்தாலும் ஆளவந்தார் அருளிச்செய்த ஸ்தோத்ரத்திற்கு உள்ளபெருமை ஒப்புயர்வற்றது. ஸ்தோத்ர ரத்நம் என்று இதற்குத் திருநாமம் வழங்கி வருதல் கொண்டே இதன் பெருமையை நாம் நன்கு உணர்தற்குரியோம்; எப்படிப்பட்ட கல்நெஞ்சினரும் உருகும்படியானது.

ச்லோ ஸக்ருத் த்வதாகார விலோகநாசயா
த்ருணீக்ருதாநுத்தம புக்தி முக்திபி:,
மஹாத்மபிர் மாமவலோக்யதாம் நய
க்ஷணேபி தே யத்விரஹோதிதுஸ்ஸஹ:!!

மஹா பாகவதர்களின் திருமாளிகைகளில் பிறவிபெறப் பாரித்தார்கீழ்;அந்த பாக்கியம் வாய்க்காமற்போனாலும், அந்த மஹான்கள் அடியேனைக்கண்டால் 'இவன் நம்முடையவன்' என்றுவிசேஷ கடாக்ஷம் பண்ணுகைக்கு யோக்யனாம்படி அடியேனைப் பண்ணியருள வேணுமென்கிறாரிதில் எம்பெருமானை நோக்கி.

திருமாலே! அந்த மஹாத்மாக்களால்அடியேன் கடாக்ஷிக்கப்பெற வேணும்; எந்த மஹாத்மாக்களாலென்னில்; உன்னுடைய திருமேனியை ஒருகாலாகிலும் ஸேவிக்கப் பெற்றால் போதும் எனவிரும்பி, 'ஐச்வரியமும் வேண்டா, ஸ்வர்க்காநுபவாதிகளும் வேண்டா, மோக்ஷஸாம்ராஜ்யமும் வேண்டா, என்று எல்லாவற்றையும் த்ருணமாக நினைத்து உதறித் தள்ளுபவர்கள் எவரோ, எவர்களை விட்டுப் பிரிந்து ஒரு நொடிப் பொழுதும் நீ தரிக்கமாட்டாயோ, அப்படிப்பட்ட மஹாத்மாக்களின் கடாக்ஷத்திற்கு நான் இலக்காகும்படி செய்தருளவேணுமென்றாராயிற்று.

"கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய், ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே" என்றாற்போலப்பிரார்த்தியா கொழிந்தது இந்திரலோக மாளுமச்சுவை பெறினும் வேண்டேன்" எம்மாவீட்டுத் திறமும் செப்பம்" "வானாளும் மாமதி போல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம் கோனாகி வீற்றிருந்து கொண்டாடுஞ் செல்வறியேன்" "கம்பமதயானைக் கழுத்தகத்தின் மேலிருந்து இன்பமருஞ் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" என்று முக்தி புக்திகளெல்லாவற்றையும் வெறுத்த ஆழ்வார்களின் கடாக்ஷம் பெறுகைக்கு ஆசைப்பட்டாராயிற்று. "க்ஷணேபிதேயத் விரஹோதிதுஸ்ஸஹ." என்ற நான்காம் அடிக்குச்சேர "அருமா மாயத்தெனதுயிரே மனமே வாக்கே கருமமே, ஒருமாநொடியும் பிரியான் என்னூழி முதல்வனொருவனே" என்ற ஆழ்வார் பாசுரம் அநுஸந்தேயம், இன்னமும் விரிவாக எழுத வேண்டும். (தொடரும்).

acharya.org

ஸ்ரீஸுதர்சந பத்திரிகையில் ஒரு நல்லுபதேசம்

அன்புடையீர்! 10நாள் முன்பு வெளிவந்த ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சந பத்ரிகையில் கீழ்க்கண்டவொரு சிறுகட்டுரையைக் கண்டோம். அதனை உலகில் பெரும்பாலோர் கண்டிருந்தாலும் அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே" என்னும்படியான அக்கட்டுரையை நாமும் ஈண்டெடுத்துக்காட்ட விரும்புகிறோம். (அது கீழ்வருமாறு)

"அருவருக்கத்தக்க நிந்தைக்கந்தை

எழுதியவர் பெயர், அச்சிட்ட அச்சகம் முதலானவைபற்றி எந்தக் குறிப்புமில்லாமல், பூர்வாசார்ய நிந்தைகளும், பொய்யும், புரட்டுகளுமே நிறைந்த 'பேதஸாம்ராஜ்யம்' என்னும் தலைப்புள்ள ஒரு நிந்தைக் கந்தை நம் பார்வைக்கு வந்தது. எழுத்தின் நடை, விஷயங்கள் முதலானவை சிலவருஷங்களாகப் பூர்வாசார்ய நிந்தையையே யாத்திரையாகக்கொண்டு ஸ்ரீரங்கத்தில் இருக்கும் ஓர் பிரபல வித்வானே இதை எழுதியவர் என்று காட்டுகின்றன. எழுதியவர் எவராயினும் இத்தகைய சுவடிகளை எழுதுகிறவர்கள் தங்களையும், தங்களது ஸம்ப்ரதாயத்தையுமே தாழ்த்திக்கொள்ளுகிறார்கள். இவற்றை மறுத்து பதிலெழுதுவது தகாது. வீதியில்போகும் ஒரு ஜந்து குரைத்தால் மனிதன் பதிலுக்குக் குரைக்க முடியுமா? சூரியனைப் பார்த்து அந்த ஜந்து குரைத்தால் சூரியனுக்குத்தான் ஏதேனும்தோஷம் உண்டா? இத்தகைய காரியங்களைச் செய்பவர்களைக் காண நேர்ந்தால் "ஆழ்வார்களையும் அருளிச்செயல்களையும் தாழ்வா நினைப்பவர்கள்தாம்... எப்பொழுதும் நீ அவர்பால் சென்றணுகக் கூசித் திரி" [உபதேச ரத்தினமாலை 35] என்னும் மாமுனிகளின் திருவாக்கின்படி நடக்கவேண்டியது உண்மையான ஸ்ரீவைஷ்ணவர்களின் கடமை; இவர்களை "மானிடவரல்லரென்று என்மனத்தே வைத்தேனே."

ஆரியர்கள்! இந்த ஸ்ரீராமாநுஜனிதழில் அடுத்து வெளிவரும் வியாஸம் "ஸாத்விகஸமாராதனம்" என்பது. அந்த வியாஸம் எந்த நிந்தைக்கந்தையைக் குறித்து எழுதப்பட்டதோ அதைப்பற்றியே மேற்குறித்த ஸுதர்சனவியாஸம் அவதரித்திருக்கின்றது. இது முன்னமே நமது பார்வைக்கு வந்திருக்குமாயின், நாம் ஸமாராதனக் கட்டுரையை எழுதியிருக்கவே மாட்டோம். அதற்கு இப்போது அநுசயிக்கிறோமென்று இது கொண்டு எண்ணவேண்டா. பகவத்ஸங்கல்பப்படி நடந்தேறியது நன்றே.

acharya.org

இந்தவிஜ்ஞாபனத்தைக் குறிக்கொண்மின்:—"குரோர் யத்ர பரீவாதோ நிந்தாவாபி ப்ரவர்த்ததே, கர்ணௌ தத்ர பிதாதவ்யௌ கந்தவ்யம்வா ததோந்யத:" என்கிற ப்ரமாணம் தொண்டரடிப்பொடியாழ்வார் அறியாததன்று; நன்கு அறிந்துவைத்தும், "குறிப்பெனக்கடையுமாகில் கூடுமேல் தலையை ஆங்கேயறுப்பதேகருமங் கண்டாய்" என்றருளிச்செய்துள்ளார். ஆசார்ய ஹ்ருதயத்தில் உறையிலிடாதவர் என்று விருது சாத்தப்பெற்ற திருமழிசைப்பிரானும் இப்படி யருளிச்செய்யக்கண்டிலோம். பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவ - உத்தரசதகத்தில் "வரத! ஸுகதபாசச் சோரலாவம் விலாவ்ய:" என்று நிர்தாக்ஷிண்யமாக அருளிச்செய்து போந்தார். இதன் பொருளை அறியவல்லார் சிலரே.

ப்ரஸங்காத் ஸ்ரீவைஷ்ணவஸுதர்சந பத்ராதிப ஸ்வாமியைப் பற்றிச் சில விண்ணப்பிக்க ப்ராப்தமாகிறது; கேண்மின்; அந்த ஸ்வாமியும் தமது பத்திரிகையில் பெரும்பாலும் பிறர்க்கு மறுப்புகள் எழுத நேர்ந்து எழுதிவருகிறார்; அந்த ஸரணியைப் பார்த்து வருகிறீர்களல்லவா? விஷயங்களில் நோக்குத் தவிர வேறுண்டோ? ஜுகுப்ஸநீயமான வசை மொழிகள் சிறிதேனுமுண்டோ?

ஸ்ரீமதுராந்தகம்பண்டிதரின் ஸ்ரீமுகப்ராப்தி

அடியேன் இக்கட்டுரையெழுதிக்கொண்டிருக்கும்போது ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீமதுபயவே. மதுராந்தகம் ஸ்ரீவீரராகவாசாரியர்ஸ்வாமி ஒரு Card ஸ்ரீமுகம் ஸாதித்திருக்கிறார். அநுஷ்டுப் ச்லோகங்களாக ஸாதித்திருக்கிறார். வழியிடையில் (Cardல்) ஜலாபிஷேகமாயிநப்பதால் முக்கியமான இரண்டு சுலோகங்களை மட்டும் இங்குக் குறிப்பிடுகிறேன்.

"உபவேஸ்வாமிபாதேஷு விஜ்ஞப்திர் நதிபூர்விகா,
வீரராகவதாஸஸ்யோபயத: குசலோபரி
விமதே பேதஸாம்ராஜ்யே நாந்வயோ மே மநாகபி;
அத்ர நௌ கலஹே ம்ருக்யமத்யஸ்தோஸ்மீதி க்ருஹ்யதாம்"

(இவற்றின் பொருளாவது) உபயவே ஸ்வாமிதிருவடிகளில் விண்ணப்பம்; ப்ரக்ருதம் விவாதாஸ்பதமாயிருக்கிற பேதஸாம்ராஜ்யச்சுவடியில் எனக்குச் சிறிதும் ஸம்பந்தமில்லை. இவ்விஷயத்தில் ப்ரமாணம் செய்யவும் ஸித்தனாயிருக்கிறேன் என்று கொள்ளவேணும் என்பதாம்.

இப்பத்திரிகையில் அடுத்த பக்கத்திலிருந்து வெளிவருகின்ற ஸாத்விகஸமாராதன நூல் பன்னிரண்டு நாள்களுக்குமுன்னமேசிலபல ஆப்தர்களுக்கு மட்டும் அனுப்பப்பட்டிருந்தது இன்றே பத்ரிகாக்ராஹகர்களனைவர்க்கும் அனுப்பப்படுகிறது. இந்த சர்ச்சை இவ்வளவோடு நிற்கவேணும். ... ...

acharya.org

ஸ்ரீரஸ்து

ஸ்ரீ ஹஸ்தி சைல சிகரோஜ்ஜ்வலபாரிஜாதாய நம:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸாத்விகஸமாராதநம்

— ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் —

Released by Maran's Dog ,Toronto, Canada

1. மதபேதங்களும் தத்ப்ரயுக்தங்களான வாத விவாதங்களும் உலகில் அநாதி காலமாகவே அநுவர்த்தித்து வருகின்றன. பரமத கண்டனங்களையெழுதுவதென்பது ஸ்ரீ வைஷ்ணவ வகுப்பில் ஆளவந்தார் காலந்தொடங்கியுள்ளது. *விசேஷ வித்பாரிஷதேஷு நாத! விதக்த கோஷ்டீஸமராங்கணேஷு, ஜிகீஷதோ மே கவிதார்க்கிகேந்த்ராந் ஜிஹ்வாக்ரஸிம்ஹாஸநமப்யுபேயா:* என வேண்டி வரம் பெற்ற ஸ்வாமி தேசிகன் காலத்தில் அபிவிருத்தியடைந்தது. விஷயங்களை சோதித்தும் விமர்சித்தும் எழுதப்ராப்தமாகிறபோது பரம ஸாத்விகர்களான மஹான்களுக்கும் ஹ்ருதயத்தில் தோன்றும் நிர்வேதமடியாக ப்ரதிபக்ஷிகளை நோக்கிச் சிறிது லாகவமாக எழுத நேருகின்றது. அது ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொரு விதமாகக் காணலாகிறது.

2. ஆளவந்தாருடைய ப்ரக்ரியை -*அபிநிவேசவசீக்ருதசேதஸாம் பஹுவிதாமபி ஸம்பவதி ப்ரம:* என்பதாகக் காண்கிறோம். ஸ்ரீ பாஷ்யகாரபக்தரொருவருடைய ப்ரக்ரியை-"ததிதம் தேவாநாம்ப்ரியாய ரோசதே" என்றுப் போலேயாம். [தேவாநாம்ப்ரிய:-மூர்க்க:] ஆழ்வான் திருக்குமாரரான பட்டருடைய ப்ரக்ரியை-*ந தே நிரஸநீயா:; அபிது சோசநீயா:* என்கிற முறையில் காணப்படுகிறது. பகவத் குண தர்ப்பணமென்கிற ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் *அவிஜ்ஞாதா* என்கிற திருநாமத்திற்குப் பிறர் பண்ணின பாஷ்யத்தினால் ஸ்வாமிக்குண்டான

Released by Maran's Dog ,Toronto, Canada
acharya.org

நிர்வேதம் இப்படியாக வடிவெடுத்தது. இதுவொரு கம்பீரமான ப்ரணாளி. ஸ்வாமி வேதாந்ததேசிகன் ஸச்சரித்ரரக்ஷையில் சக்ராங்கந தூஷகர்களை நினைக்கும்போதே அன்னவர்களின் மீதுண்டான சீற்றம் *ப்ரஹராமி மூர்க்காந்* என்றிப் புடையிலே எழுதப் பண்ணிற்று. இங்ஙனே பலவகைப்பட்டிருக்கும் லாகவோக்திகள்.

3. இவையெல்லாம் ப்ரதிபக்ஷிகளின் மனத்தைப் புண்படுத்தக் கூடியவையேயாம். இவ்வாசிரியர்களின் திவ்ய க்ரந்தங்களில் இத்தகைய வாக்கியங்கள் சிற்சில இருந்தாலும் நிரூபணீயவிஷய நிருபணங்கள் நிரவத்யஹ்ருத்யதமங்களாய் விளங்குமாகையாலே மேலே குறிப்பிட்ட க்ஷேபோக்திகளில் வைரஸ்யம் தோன்றுது.

4. இக்காலத்தவர்கள் எழுதும் வாத விவாதச் சுவடிகளின் போக்கு எப்படிப்பட்டதென்றால், பங்கமடையக்கூடாமல் ப்ராமாணிகங்களான விஷயங்களை ஸமர்த்திக்கப்புகுந்த வித்வான்கள் ஆர்ஜவம் குன்றாமல் எழுத சக்தர்களாயிருந்தால் நிந்தோக்திகளை நெஞ்சிலும் நினையாமல் க்ராந்திகர்கள் உகக்கும்படியான விஷயங்களையே பிரமாணபுஞ்ஜங்களைப் பொழிந்து விளக்குவர்கள்.

5. இன்று (17-7-80) ஆறேழேடுகளைக்கொண்ட ஒரு சிறு சுவடி ஸ்ரீரங்கம் முத்திரையிட்டதாகி அஞ்சல் மூலமாக நமக்குக் கிடைத்தது. முகப்பில், தென்கலைத் திருமண்காப்பு, (சுவடியின் பெயர்) பேதஸாம்ராஜ்யம்; அடுத்தவரி-(லோக குருக்களின் அருள்மொழிகள்). அதன் கீழே "வெளியிடுபவர்-கடல்வண்ணன்" இவ்வளவே. அச்சுக்கூடத்தின் பெயரோ தேதியின் குறிப்போ ஏதுங்கிடையாது. நாமநிர்தேசமில்லையாயினும் வாக்கியங்களை நோக்குங்கால் அந்தகர் என்று ஸ்ரீ ரங்கவாஸிகளால் பெயரிடப்பெற்ற ஒரு பண்டிதருடைய வாக்கைவியென்பதை ஒவ்வொருவரும் அநாயாஸமாக அறுதியிடுவர். இறையும் ஐயமில்லை. அஃது எப்படியாயினும்கிடக்க; அச்சுக்கூடத்தின் பெயரை வெளியிடாமல் மறைத்தாலும், கண்டுபிடிக்கவல்லவர்கள் நபரையும் எளிதாகக் கண்டுபிடித்தேவிடுவர்கள். இதை விஞ்சிய நிந்தைக்கந்தை வேறு கிடையாது.

6. அந்த்யஜன் என மகுடமிட்ட ஒரு பக்கத்தில் "(மணவாள) மாமுனிகள் தமக்கு ப்ரியசிஷ்யையும் திருமஞ்சனம் அப்பா ஸ்வாமியின்

acharya.org

பெண்ணுமான ஆச்சியென்கிற செங்கமலத்தம்மாளுடன் வெகுகாலம் போகப்ரவணராய் பசுவ்ருத்தியிலே போந்த துச்சரிதத்தை *வ்ருத்யா பசுர் நரவபுஸ் த்வஹம்* கந்தர்ப்ப வச்யஹ்ருதயஸ் ஸததம் பவாமி* என்றும் சுலோகங்களாலே நிர்வேதத்துடன் எம்பெருமானுரிடம் விண்ணப்பிக்கிருர். இப்படிப்பட்டவரை சரமபர்வ நிஷ்டராக அநுஸந்திப்பது வசன பூஷண நூலுக்கு விரோதமானதென்று தெரியாமலே டகுடமாரம் அடித்துப் பேசுமவர்கள் உண்மை விவேகிகளா என்பதை சிந்திக்கவேணும்" என்றெழுதியுள்ளார்; யார்? அந்தக விருது பெற்றவர்.

7. ஆளவந்தார் தம்மை "ஸ்மரபரவசோ வஞ்சநபர:" என்றும், ஆழ்வான் "விஷயவிஷயிணீ ஸ்ப்ருஹா பூயஸீ தவ து சரணயோர்ந ஸால்பாபி மே" என்றும் அநுஸந்தித்துப் போந்ததைக் கண்டு இவ்வந்தகர் அவ்வாசாரியர்களுக்கு வைப்பாட்டிகளைக் கல்பனை செய்ய வல்லவரேயாவர். படித்தவர் எழுதுகிற பங்க்திகளா இவை? "அமர்யாத:-க்ஷுத்ர: சலமதி: அஸூயாப்ரஸவபூ:....ஸ்மரபரவச: வஞ்சநபர:-ந்ருசம்ஸ: பாபிஷ்ட: இத்யாதிகளுக்கு ப்ரணவ சதுர்த்தீ நமஸ்ஸுக்களைக் கூட்டித் துளஸீதளங்களாலே ஆளவந்தாரை இவ்வந்தகர் அர்ச்சிப்பர் போலும். ஆழ்வானையும், *அக்ருதஸுக்ருதக:, ஸுதுஷ்க்ருத்தர: சுபகுணலவலேச தேசாதிக:-இத்யாதி நாமங்களையிட்டு அர்ச்சிப்பர்போலும்.

8. "அக்ருத்யாநாஞ்ச கரணம் க்ருத்யாநாம் வர்ஜநஞ்ச மே" என்றநுஸந்தித்தருளின ஸ்வாமி தேசிகனை அக்ருத்யாநுஷ்டாதா, க்ருத்யபரித்யக்தா என்று சொல்லிப் புகழ்வர்போலுமிந்த தேசிக பக்தர். ஸ்வாமி கோதாஸ்துதியில் "அஸ்மாத்ருசாம் அபக்ருதௌ சிரதீக்ஷிதாநாம்" என்னும் சுலோகத்தினல் ஸ்வாமி தாம் அபசரிதங்கள் செய்வதில் நெடுங்காலமாக விரதம் பூண்டவர் என்று உபந்யஸிப்பவரன்றோ இவ்வந்தகர். இப்பண்டிதரேயன்று, வேறு எவராயினும் இந்த சுலோகத்தை உபந்யஸிக்கப் புகுந்தால் இங்ஙனமேயல்லது வேறு விதமாக உபந்யஸிக்கப் போகாது காணும். மற்றவிடங்களிற் காட்டிலும் இவ்விடத்திற்கு ஒரு விசேஷமுண்டு. —:"அபக்ருதௌ சிரதீக்ஷிதாநாம்" என்றதில் சுவடறியவேணும். "விநதவிவிதபூதவ்ராத ரக்ஷைகதீக்ஷ:" என்கிறபடியே எம்பெருமான் ப்ரபந்நஜநரக்ஷணத்தில் தீக்ஷை கொண்டிருப்பதுபோல, ஸ்வாமி ஸபரிகரராக துச்சரிதகரணங்

acharya.org

களில் தீக்ஷை கொண்டிருந்தாரென்று இவர் உபந்யஸிக்கப்பாங்காக வன்றே சப்தவிந்யாஸமுள்ளது. அசடுபிசடு லேகநஸரணியில் இவருடைய பரிசயம் க்ஷுண்ணமாயிருப்பதை நாம் நெடுநாளாக அறிவோம். “நிரஸ்தபாதபே தேசே ஏரண்டோபி த்ருமாயதே” என்கிற சுலோகத்தை ஸ்மரிப்பிக்குமிவர் இதுவரை எத்தனை ஏடுகள் எழுதி அச்சிட்டு வெளியிட்டார்? எந்தெந்த விஷயங்களை ஸ்தாபித்தார்? என்று மடிபிடித்துக் கேட்டால், ஸுதா என்று முதா எழுதி மூன்று நாளில் சுடச்சுடப் பாயஸம் பெற்றெழிந்தேன் என்பர்.

9. *ப்ராரப்தமுத்தமகுணாநபரித்யஜந்தி” என்பதற்கு உத்தமர்களையும் ப்ராரப்தகருமம் விடாது என்று பொருள் சொல்லி, (ந்தி) என்று பஹுவசனமெப்படியென்று மருளவேண்டா; *சார்தூலோ வ்ருஷபம் ஹந்திபோலே ஏகவசனத்திலும் (ந்தி) உண்டென்று கொண்மின் என்று திருவையாற்றில் உபதேசித்து ப்ராரப்த பண்டிதர் என்று வழங்கப்பெற்றவரன்றே இப்பெரியார். இரண்டு வரி வாசித்தவுடனே இவருடைய திருவாக்கென்று தெரியவராதோ?

10. யதிராஜவிம்சதியில் *கந்தர்ப்பவச்ய ஹ்ருதயஸ் ஸததம் பவாமி* என்ற ஸ்ரீ ஸூக்திக்கு முன்னே *காமாதி தோஷஹரம் ஆத்ம பதாச்ரிதாநாம்* என்கிற உபக்ரமச்லோகத்தின் த்ருதீய பாதத்தையும் எடுத்துக்காட்டியுள்ளவிவர்க்கு ஆத்ம பதாச்ரிதாநாம் காமாதி தோஷஹரத்வம் யதிராஜர்க்கு அஸம்பாவிதமென்றே தூஷணமென்றே கருத்துப்போலும். கரடிக்குப் பிடித்தவிடமெல்லாம் மயிர்.

11. பலவிடங்களில் “ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸம்ரக்ஷிணீ ஸபா என்று பற்பல மஹான்கள்கூடி ஸ்தாபித்திருப்பதாக பத்திரிகைகளில் வெளிவரக் காண்கிறோம். அந்த ஸபையினர்களுக்கெல்லாம் இந்த அந்தகக்ருதியான அபத்தச்சுவடி அனுப்பப்பட்டிருக்குமே; அவரவர்களும் வாசித்திருப்பர்களே. ஆளவந்தார் *ஸ்மரபரவசரும் வஞ்சனபரருமாயிருந்து காலங்கழித்தார்; எம்பெருமானார் *பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசாரங்களை க்ஷணந்தோறும் செய்துகொண்டு போது போக்கினர்; கூரத்தாழ்வான் “விஷயவிஷயிண்யா பூயஸ்யா ஸ்ப்ருஹயா விஹ்வலராயிருந்தார் என்றிப்படியெல்லாம் இவ்வந்தகர் எழுதியிருப்பவற்றைப் பாராதிருப்பர்களா? நம்மவர்கள் செய்யக்கூடிய தேசிகஸூக்திஸம்ரக்ஷணம் இப்படித்தான் அமையும்,வாய்க்கும்’

acharya.org

என்று எண்ணியிருக்கிறார்களா? அந்த ஸபையார்கள் ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸம்ரக்ஷணத்தை எவ்விதமாக நடத்திவருகிறார்களென்பதைச் சிறிது வெளியிடமாட்டார்களா? ரக்ஷண் ஸபையென்று பெயரிடப்பெற்ற ஸபைகள் எவ்விதமான ரக்ஷணம் செய்து போருகின்றனவென்று கேட்பாரில்லையா?

12. "ஸர்வஸ்வாமிநியாய் ஸர்வேச்வரனுக்கு சேஷபூதையாய் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிசயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிசயத்தாலும் புருஷகாரமாய்க்கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிறாள், இவளைப் புருஷகாரமாக்க வேண்டுகிறது ஈச்வரன் தண்டதரனாகையாலே" என்கிற வாக்யமாலையைச் சொல்லி, இது யாருடைய திவ்ய ஸூக்தியென்று கேட்டால் *விசுத்த தேசிகவதோ வேங்கடேச விபச்சித:* என்று அடுத்த க்ஷணத்தில் விடையளிக்கவல்ல வித்வான் இவரொருவரேயன்றோ? "இது எந்த நூலிலுள்ள ஸூக்தி?' என வினவினால் ரஹஸ்யரத்நாவளீ ஸூக்தி'யென்று சடக்கெனச் சொல்லுவர். இதன் அர்த்தமென்னவென்று கேட்டால் அநர்த்தமே அர்த்தமென்பர். இப்படி விடையளிக்க லஜ்ஜையாக இல்லையா? என்று கேட்டால் "லஜ்ஜிதுமபி லஜ்ஜதே" என்கிற முராரி ஸுபாஷிதத்தைச் சொல்லிச் சிரிப்பர்.

அந்தக பண்டிதர் செய்யும் பகவத்பாஷ்யகார தூஷணம்.

பலரும் விசேஷித்துக் குறிக்கொள்க. வடமொழி தென்மொழி தெலுங்கு ஹிந்தி ஆகிய நான்கு பாஷைகளிலும் தென்னாசார்ய ஸம்பிரதாயதத்துவங்களை நாம் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம். ஒரு பதிப்பல்ல; பல பதிப்புகளுமாயின இப்படியே தேசிகஸூக்தி ஸதர்த்த விசேஷங்களையும் தென்மொழி வடமொழிகளிலும் வெளியிட்டிருக்கிறோம். இதேபோல் "வடகலை ஸம்ப்ரதாய ஸதர்த்தங்கள்" எனப் பெயரிட்டு ஒரு புத்தகம் வெளியிடுங்கள்—என்று பலகாலும் இந்த அந்தகர்போல்வாரிடத்திலும் மற்றும் பலரிடத்திலுய் பலகாலும் சொல்லி வந்திருக்கிறோம். நமது பல நூல்களிலும் எழுதியிருக்கிறோம். அதற்குத் துணிவேது?

அந்தகர் இப்போது வெளியிட்டிருக்கும் அபத்தச் சுவடியில் முதல் பக்கத்தில் "ப்ரபந்நனுக்கு" என்று தொடங்கும் பாராவில்

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ரத்தில் "ப்ரபந்நனுக்கு விஹித விஷய நிவ்ருத்தி தன்னேற்றம்" இத்யாதியாகவுள்ள ஸ்ரீஸூக்திகளை உதாஹரித்து, தானும் தமரும் செய்யும் தீய செயல்களைப் பரம வைதிகர்களின் மீது ஏறிட்டு அநுவதிக்கவும் அத்யந்தம் அநர்ஹமாக எழுதியுள்ளது.

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீமத் வரவரமுநிவர்ய ஸித்தாந்த ஸாரத்தில் இதுபற்றி நாமெழுதியிருப்பவற்றை முன்னம் அநுவதிக்கிறோம்.

Released by Maran's Dog ,Toronto, Canada

8. விஹிதவிஷய நிவ்ருத்தி தன்னேற்றமென்பதுபற்றி.

க்ருஹஸ்தாச்ரம தர்மமாக விஹித விஷய போகம் ப்ராப்தமானாலும், அநந்யார்ஹ சேஷத்வ அநந்ய சரணத்வங்களோடுகூட அநந்ய போக்யத்வமென்கிற விலக்ஷணமான தன்மையும் பெற்றிருக்கின்ற விசேஷாதிகாரிக்கு அந்த விஹித விஷய போகம் அருவருக்கத் தக்கதாய் விடத்தகுந்ததேயாகுமென்பது ஸதாசார்ய ஸித்தாந்தம். சாஸ்த்ரங்களில் ஸ்வதார போகம் நியமமாக விதிக்கப்பட்டு அது தவிர்த்தால் தோஷமும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கையாலே விஹித விஷய நிவ்ருத்தி அசாஸ்த்ரீய மென்பர் நவீநர். ஸ்ரீவசநபூஷணத்தில் இரண்டு மூன்றிடங்களில் உத்தமாதிகாரிக்கு விஹிதவிஷய நிவ்ருத்தியைத் தன்னேற்றமாக அருளிச்செய்கிறார். மிகுஞானச் சிறுகுழவியான எம்பெருமான் சோதிவாய் திறந்து பணித்த கீதையில் (8 3) எட்டாவது அத்யாயத்தில் மூன்றாவது ச்லோகத்தின் பாஷ்யத்தில் பாஷ்யகாரர்வெளியிட்டருளின விசேஷார்த்தமிது! அதனை விவரிப்போமிங்கு:—கீழ் ஏழாவது அத்யாயத்தின் முடிவில் கண்ணபிரான் *ஜராமரண மோக்ஷாய* என்கிற இருபத்தொன்பதாம் ச்லோகத்தில் *தே ப்ரஹ்ம தத் விது: க்ருத்ஸ்நமத்யாத்மம் கர்ம சாகிலம் *என்று ஒரு வார்த்தை சொன்னான். அது கேட்ட அர்ஜுனன் அந்த வார்த்தைக்கு உண்மையான பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டிக் கண்ணனையே கேள்வி கேட்கிறான் எட்டாவது அத்யாயத்தின் 1, 2-ச்லோகங்களினால், *கிம் தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம! என்று தொடங்கிக் கேள்விகள் உள்ளன; மூன்றாவது ச்லோகம் தொடங்கிக் கண்ணனுடைய விடை வெளிவருகிறது. கிம் கர்ம? என்ற கேள்விக்குக் கண்ணனுடைய விடை. *பூதபாவோத்பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித:* என்பது; இங்கு விஷயமென்னவென்றால், கேண்மின்.

Released by Maran's Dog ,Toronto, Canada
acharya.org

சிலவற்றை அறியவேண்டும் என்று பகவான் நியமித்து வருகையில் கருமத்தை அறியவேண்டும் என்று சொல்லி யிருந்ததனால் கருமமென்றால் எது? என்று அர்ஜுனன் கேட்க நேர்ந்தது. அதற்கு பகவான் விடை கூறியுள்ளார். ஒருவன் ஒன்றை யறிவதானது, பற்றுவதற்காகவும் ஆகலாம், விடுவதற்காகவும் ஆகலாம். நல்லதாயிருந்தால் பற்றுவது கெட்டதாயிருந்தால் விடுவது, ஆகவே நல்லதையும் தெரிந்துகொள்ள வேண்டும், கெட்டதையும் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கே தெரிந்துகொள்ள வேண்டியதாகக் கூறப்பட்ட கருமம் நல்லதன்று; கெட்டது என்பதாக பகவானுடைய விடையினால் தெரிகின்றது. *பூதபாவோத்பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித:* என்பதற்கு நம்முடைய ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்திருக்கிற அர்த்தம் வருமாறு:-*பூதபாவ:-மனுஷ்யாதிபாவ: ததுத்பவகரோ யோ விஸர்க்க:- *பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தீதி ச்ருதிஸித்தோ யோஷித் ஸம்பந்தஜ:; தச்சாகிலம் ஸாநுபந்தம் உத்வேஜநீயதயா பரிஹரணீயதயா ச முமுக்ஷுபி: ஜ்ஞாதவ்யம்; பரிஹரணீயதாச அநந்தரமேவ வக்ஷ்யதே "யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தீதி" என்பது கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தி; இதன் கருத்தாவது—ஸ்த்ரீ புருஷஸம்யோகமென்பதுதான் இங்கே கருமமென்கிறது. இது மிகவும் அருவருக்கத்தக்கதாகையால் விடத்தக்கதாக இதனை யறியவேண்டும். இதை விடவேண்டுமென்பது மேலே பத்தாவது சுலோகத்திலும் காட்டப்படுகிறது என்பதாம். இதனால் நாம் தெரிந்துகொள்வது: க்ருஹஸ்தாச்ரம தருமமாக விஹிதவிஷயபோகம் ப்ராப்தமேயானாலும் அது விசிஷ்டாதிகாரிக்கு ஜுகுப்ஸநீயமே யென்று. ஆகவே இவ் விஷயத்திலும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தாந்தம் நிரவத்யமென்றுணர்க"

13. ஆக இவ்வளவும் "ப்ரபந்நனுக்கு விஹித விஷய நிவ்ருத்தி தன்னேற்றம்" என்கிற ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்திக்கு அவஷ்டம்பமாக அமைந்தவை கீதா பாஷ்யஸூக்திகளுக்கு அப்படியன்று பொருளென்னில் வேறு எப்படி யென்பதை அந்தகர் விளக்கட்டும். அவ்விடத்துத் தாத்பர்ய சந்திரிகையில் இதற்குக் கண்டனமிருந்தால் எடுத்து விவரிக்கட்டும்.

14. ஒரு திருக்கோலத்துடன் (கீதாபாஷ்யத்தில்) ஸம்ஸ்க்ருத பாஷையினால் அருளிச்செய்த அர்த்தத்தையே மற்றொரு திருக்கோலத்

acharya.org

துடன் மணிப்ரவாள பாஷையினுல் அருளிச்செய்தாரென்னுமிட மறியாத இந்த அக்கிலிபிக்கிலிபண்டிதர், ஸ்வாமி ஸப்ததியில் 'ஸ்வஹஸ்தேநோத்க்ஷிப்தைஸ் ஸ கலு நிஜகாத்ரேஷு பஹுளம் களத்பிர் ஜம்பாலேர் ககந தலமாலிம்பதி ஜட:'' என்றருளிய திவ்ய ஸூக்திக்கு ப்ரதமலக்ஷ்யமாய்ப் பரிஹஸிக்க நிற்பது என்ன தலைவிதியோ? சில அக்ரஹாரங்களிலே தம்பியானவன் தமையனை விதவாபுத்திரனென்று வசை கூறுவது வழக்கம் இந்த அந்தகவ்யக்தி ஒன்றையும் கசடறக்கற்காதே திருப்பதி நாபிதன்வபனம் போல் அரைகுறையாகக் கற்று "அக்கிலிபிக்கிலியன்ரு அது" என்று எந்த ஊரிலும் எவரும் கூசாமல் பேசும்படி காலங் கழிப்பதைப்பன்னியுரைக்குங்கால் பாரதமாம். கீதாபாஷ்யத்தில் ப்ரவேசலேசமுமற்ற விவர்க்கு ஸ்ரீ பாஷ்யத்தில் சொல்ல வேணுமோ?

ப்ராஸங்கிகம் ச்ரத்தயா பச்யத.

நிகழும் ஆடி மாதத்து ஸ்ரீரங்கநாதபாதுகா பத்ரிகையில் "திருப்பல்லாண்டும் திருப்பாவையும்" என்றொரு கட்டுரை வெளிவந்துள்ளது. இதையெழுதியவர் பெயரை மறைக்காமல் வெளியிட்டுள்ளார். இது தைவாதீனமாக நல்ல ஸமயத்தில் நமது கண்ணில் பட்டபடியால் உலகுக்கு மஹோபகாரமாக (இடையில்) இது எழுதுகிறோம். தமிழில் வல்லினம் மெல்லினம் இடையினம் என்கிற சொற்கள் காதிலும் விழப்பெருதவரென்றும், நகரனகரவாசியைச் சிறிது மறியாதவரென்றும், திவ்ய ப்ரபந்தப் பாசுரங்களைப் பாழ்படுத்துவதற்கென்றே பிறந்தவரென்றும் நிதர்சந பூர்வகமாக நாம் பலகால் நிரூபித்திருக்கும் நபரை மறந்திருக்கமாட்டீர்கள். தலை வேதனையான இவரது வியாஸங்களை நாம் வாசிக்க விரும்பாமற்போனாலும் ஸமய விசேஷங்களில் தன்னடையே நமது கண்ணில் படுவது வழக்கம். அஸம்பத்தங்களை ஒன்று விடாமல் எடுத்துக் காட்டுவதென்ருல் மெய்யே பாரதமும் ராமாயணமுமாகும். சில மேஙள்மின்; ஆண்டாளுடைய பாசுரங்களைக் கூட்டிக்கணக்கிடுமிவர் "நூற்றியெழுபத்து மூன்றுமாக" என்றெழுது கிருர். இதைக்கண்டு சிறுமிகளும் சிரித்தாகள். 173 என்றெழுதியிருக்கலாம். "எந்நாளெம்பெருமான்" என்னும் பாசுரத்தைக் குறிக்குமிவர் என்னுர் என்றெழுதியுள்ளார். உண்மையில் இதற்கு ஒரு கிழவி சிரித்தாள். கிழவி, குமரி என்று வகையிடவேண்டா.

acharya.org

சிரிக்காதவர்கள் கிடையார். 'நாராயணனே என விழுந்திருப்பதற்கு ஒருவரும் சிரிக்கமாட்டார். இதெல்லாம் கிடக்கட்டும். பாசுரங்களைப் பாழ்படுத்தும் பரிசு "இப்படிப்பட்டவர் ஸ்ரீ வைஷ்ணவர்களிடையே எப்படியுலாவுகிறார்?" என்று நினைக்கப்பண்ணுகிறதந்தோ! "நீக்கமில்லா அடியார்க்கு" என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் அருளியிருப்பதாக எழுதுகிறார்! ஐயோ! தலை வேதனையே. உண்மையில் ஆழ்வார் அப்படியருளிச் செய்திருந்தாலும் இவர் இங்கு அடியார் என்றே எழுதியிருக்கவேண்டும். ஏனெனில்; "செயமே அடிமை தலை நின்றார் என்றும் (* நீக்கமில்லா)....என்றும், *கோதிலடியார்* என்றும் மூவகையுண்டு" என்றெழுதிப்போருமிவர் இடையில் வேற்றுமையை மாற்றலாமா? என்று விவேகிக்கைக்குக் களிமண் இடம்தரவில்லையே. "இத்தலைவேதனை மேலும் தொடரும் ப்ரகரண விசேஷே"-என்கிறார். இதெல்லாம் எனக்குமட்டுமா! உலகுக்கே தலைவேதனையாயில்லையா? ஸம்ஸ்க்ருதத்தில் அநுவாதம், அநுகாரம் என்கிற சொற்களின் பொருள் வாசியறியகில்லாதவிவர் *நினைந்திருந்தே சிரமம் தீரலாமே. நம்மால் விவேகி வித்வத்ஸார்வபௌமரென்று விருதளிக்கப்பெற்ற தன்னொப்பாரில்லப்பன் நவநீதவித்வான் எத்தனை பக்கமெழுதினாலும் சோம்பாது வாசிக்கலாமே. ப்ராஸங்கிகம் விரமது. ஸ்ரீ பாஷ்ய-கீதா பாஷ்யாதிவைதேசிகரான விவர் வாளா கிடந்தருள்வது நன்று. .... *

15. "*கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்த்வாத்* என்கிறபடியே ஜீவனுக்கு கர்த்ருத்வம் ப்ராமாணிகமேயாகிலும் இது பராதீனமுமாய் அல்பவிஷயமுமாய் ப்ரதிஹதியோக்யமுமாயிருக்குமாகையாலே இவன்தான் உபாயாநுஷ்டானம் பண்ணிற்றும் *வரத! தவ கலு ப்ரஸாதாத்ருதே சரணமிதி வசோபி மே நோதியாத்*என்று சொல்லுகிறபடியே அவன் கடாக்ஷமடியாக வருகையால் அவனாலே ப்ரேரிதனாய், அவன் ஸஹகரியாதபோது நீட்ட முடக்க மாட்டாதே அவன் கொடுத்த கரணகளேபரங்களைக் கொண்டு அவன் காட்டிய வுபாயத்தை அவன் துணைசெய்ய அநுஷ்டித்து, அவனால் கொடுக்கப்படுகிற பலத்துக்கு சாதகம் போல அண்ணாந்திருக்கிறவிவனை ஸ்வாதீந ஸர்வவிஷய அப்ரதிஹத கர்த்ருத்வமுடையவனோடே துல்யமாக இரண்டாம் ஸித்தோபாயமாகவெண்ணுகை விவேகிகளான முமுக்ஷுவுக்கு உசிதமன்று....
*என்னானை யென்னப்பனென்நெஞ்சில் உள்ளேயிருந்தின்னென் அதுவு மவனதின்னருளே

என்றும் *இசைவித்தென்னையுன் தாளிணைக்கீழிருத்து மம்மானே* யென்றுஞ் சொல்லுகிறபடியே உபாய பூதனை அவன்செய்விக்கச் செய்கிற வ்யாஜமாத்ரத்தை அவனோடொக்க உபாயமாகவெண்ணுகை உசிதமன்றென்று(ஏக)சப்தத்துக்குதாத்பர்யம்" இந்ததிவ்ய ஸ்ரீஸூக்திகளைச் சொல்லி, "இவை ஸ்வோக்தி கண்டனமா? பரோக்தி கண்டனமா"? என்று கேட்டால், "ஸ்வோக்திகண்டனமென்பதற்கு என்னஸந்தேஹம்? என்பர் ப்ராரப்தபண்டிதர்.

"ச்ரிய:பதிக்கு அநந்யார்ஹநிருபாதிகசேஷபூதராய் அந்தமில் பேரின்பத் தடியரோடிருந்து அனைத்துலகுமுடைய அரவிந்த லோசனனைத் தினைத்தனையும்விடாதே அநுபவிக்க ப்ராப்தரான க்ஷேத்ரஜ்ஞர் அநாத்ய வித்யா கர்மாதி ப்ரவாஹத்திலொழுகிக் கரையேற விரகற்று அலமருகின்ற படியைக் கண்டருளின பரம காருணிகனான பரம சேஷி தானே ஞானக்கை கொடுத்து இவர்களை யெடுக்க இடம் பார்த்து அஜ்ஞாத யாத்ருச்சிக ஆநுஷங்கிக ஸாமாந்யபுத்திமூல ஸுக்ருத விசேஷங்களை வியாஜமாகக் கொண்டு விசேஷ கடாக்ஷம் பண்ணி அத்வேஷ ஆபிமுக்க்ய ஸாத்விகஸம்பாஷணாதிகளையுண்டாக்கி" என்கிற வாக்கியங்களைச் சொல்லி "இந்த தேசிக திவ்ய ஸூக்திகள் எங்கே யிருக்கின்றன? சொல்லுவீரா?" என்று அந்தகரைக் கேட்டார் ஒரு ஸமயம் உ.வே. வாகம்ருதவர்ஷிஸ்வாமி! அப்போது அந்தகர் விடையளித்தாராம்;—'யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் அஜ்ஞாதம் விஜ்ஞாதம் என்பதெல்லாம் லோகாசார்யருடைய ஸூக்திகளல்லவா? என்னை விஷம வழியில் பரீக்ஷிக்கப் பார்க்கிறீரோ?" என்றாராம். மறுநாள் வாகம்ருதவர்ஷி ஸ்வாமியைத் தேடிப்பிடித்துக் கண்டு பரமபத ஸோபாநத்தில் அர்ச்சிராதியிலிருந்து அநுவதிக்கிற உக்திகளிவை; தேசிகாபிமதங்களல்ல" என்றாராம்.

16. ஒரு நாள் ஸ்ரீமதுபய வே. சதாபிஷேகாசார்யஸ்வாமி இந்த ப்ராரப்தபண்டிதரைக்கண்டு "இப்படி மத்யஸ்தத்ருஷ்டியாலே ப்ராமாணிகார்த்தங்கள் தோற்றச் செய்தேயும் பற்றினது விடாதொழியில்" என்கிற ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார திவ்ய ஸ்ரீஸூக்தியில் "மத்யஸ்தத்ருஷ்டியாலே தோற்றின ப்ராமாணிகார்த்தங்கள் எவை? பற்றினது விடாதே பேசின அர்த்தங்கள் எவை? பேசினவர் யாவர்?" என்கிற கேள்வி அறுபது வருஷமாகத் தொடர்ந்து வாரா நின்றது...... அதி

acharya.org

கரண ஸாராவளியில் "பாஷ்யாதிக்ரந்தலேசோபி அவஹிதமநஸாம் ஐதமர்த்த்யம் பஜே ந." என்றவிடத்தில் "அவஹிதமநஸாம் தோற்று மர்த்தம் எது? அநவஹித மநஸாம் தோற்றும் அபார்த்தம் எது? அவ தாநே ஸதர்த்தத்தையும் அநவதாநே அஸதர்த்தத்தையும் தோற்று விக்கிற பாஷ்யாதிக்ரந்தலேசம் எது? என்கிற கேள்விக்கு, விடை ஸாதிக்கலாகுமோ? என்று கேட்க, "நாளைக்கு விமர்சித்துச்சொல்லு கிறேன்" என்று கூறிக் கனவேகமாக விலகிச்சென்றாராம்.

கருடபுரம்ஸ்வாமியும் மங்களம்பாடிஸ்வாமியும் ஸம்பாஷித்தது

மங்கலம்:-அத்ருஷ்டார்த்தமென்கிறீர்களே, அதன்பொருளென்ன?

கருட:-க்ரந்தங்களொன்றிலும் பூருவர்களின் அநுஷ்டாநத்தி லும் காணாத அர்த்தம் என்றபடி. ஸம்ப்ரதாய பரிசுத்தியிலும் குரு ப்ரம்பராஸாரத்திலும் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு இன்னாரிடத்திலே இன்ன க்ரஹணமென்று எழுதியுள்ள தேசிகன் அத்ருஷ்டார்த்தத்திற்கு ஒராசார்யரைக்காட்டவில்லை. திருவிலச்சினை இட்டருளின ஆசாரியரை உபேக்ஷித்து, தேங்காய்முடியாசாரியரென்று ஒருவர்பின்னாலோடுவது முன்னங்கண்டறியாததன்றோ?

மங்களம்:- ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திலே-' அநாதி காலம் ஆஜ்ஞாதிலங்கனமடியாகவுண்டான பகவந்நிக்ரஹத்தாலே ஸம்ஸரித் துப்போந்த நமக்கு அவஸரப்ரதீக்ஷையான பகவத்க்ருபையடியாக வுண்டான ஸதாசார்ய கடாக்ஷ விஷயீகாரத்தாலே வந்த த்வயோச் சாரணாநுச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்த பின்பு சரண்ய ப்ரஸாதநங்களில் இதுக்குமேல் ஒன்றில்லாமையாலே நிக்ரஹ ஹேதுக்களையெல்லாம் க்ஷமித்துத் தீர்ந்தவடியவர் தம்மைத்திருத்திப் பணிகொள்ளவல்ல ஸர்வசேஷியான ச்ரிய:பதி தன் பேறாகத்தானே ரக்ஷிக்குமென்று தேறி நிர்ப்பரனாயிருக்கை; இது "மாசுச:" என்கிற சரண்ய வாக்யத்திலும் தீர்ந்தபொருள்" என்று க்ருதக்ருத்யாதிகாரத் தில் தமிழிலெழுதினதை சரணாகதிகத்யபாஷ்யாவஸாநத்தில் வட மொழியாலே லவலேசமும் மாறுபாடின்றிக்கே எழுதிவைத்திருக் கிறாரே தெரியுமா தேவரீருக்கு?

கருட:- ஏன் தெரியாது? அதுதெரியாமல் ஆசார்யகம் பண் ணுவது முண்டோ? புத்தகம் பாராமல் அந்த பங்க்திகளை உள்ள படியே ஒப்பிக்கிறேன் கேளீர்.

acharya.org

"ஏதேந அநாதிகாலம் ஆஜ்ஞாதிலங்கந மூல பகவதப்ரஸாதேந ஸம்ஸரதோ மே பகவத்ப்ரஸாதமூல ஸ்வாசார்யாங்கீகாரேண த்வயோச்சாரணாநூச்சாரணபூர்வக ஸ்வரக்ஷாபரந்யாஸே ஸித்தே, ப்ரஸாதநேஷு அஸ்மாத் அப்யதிகஸ்ய அபாவாத் ஸ்வீக்ருதபர: ச்ரிய:பதிர் நாராயண: காலத்ரயவர்த்திந: ஸர்வாந் அப்ரஸாதஹேதூந் யதார்ஹம் க்ஷாந்த்வா ஸ்வயமேவ ஸ்வார்த்தமேவ மாம் ஸ்வஜ்ஞாநதர்சநப்ராப்த்யாதிப்ரதாநேந ரக்ஷிதி நிர்ப்பரோ நிர்ப்பய: ஸந்துஷ்டோ பவேதி நிகமிதம் பவதி"

இவை க்ருதக்ருத்யாதிகாரத்திலுள்ள தமிழ்ப்பங்க்திகளுக்கு அந்யூந அநதிரிக்தமான மொழி பெயர்ப்பு.

மங்களம்-தேசிகன் ஸம்ஸ்க்ருதபங்க்திகளை முன்னமெழுதி, அவற்றுக்கு மொழி பெயர்ப்பாகத் தமிழ் வாக்கியங்களையெழுதினாரா? தமிழ் வாக்கியங்களை முன்னேயெழுதி அவற்றுக்கு மொழி பெயர்ப்பாக ஸம்ஸ்க்ருத வாக்கியங்களைப் பின்பு எழுதினாரா? ஒன்றுக்கு ஒன்று நேர்மொழிபெயர்ப்பு என்பதில் தடையில்லை; பௌர்வாபர்யத்தில் சங்கையுண்டாகிறது; ஸமாதாநம் ஸாதிக்கலாமோ?

கருட:-இந்த விசாரம் எதுக்கு? தமிழில்-"சரண்யப்ரஸாதநங்களில் இதுக்கு மேற்பட ஒன்றில்லாமையாலே" என்று எழுதினதை "ப்ரஸாதநேஷு அஸ்மாத்அப்யதிகஸ்ய அபாவாத்" என்று ஸம்ஸ்க்ருதப்படுத்தி யிருப்பது அற்புதமல்லவா? இப்படி வேறொருவரால் தர்ஜமா செய்யமுடியுமா? "இதுக்கு மேற்பட ஒன்றில்லாமையாலே" எனகிற தமிழ் வாக்கியமும், "சரண்யப்ரஸாதநேஷு அஸ்மாத் அப்யதிகஸ்ய அபாவாத்" என்கிற ஸம்ஸ்க்ருதவாக்யமும் ஸ்ரீராமாயணத்திலே "வஜ்ரபாத அசநிஸந்நிபாதாத்" என்றாப்போலே தேங்காய்முடி சரணாகதிகாரர்களுக்கு வஜ்ரபாதமும் அசநிஸந்நிபாதமுமாக இல்லையா? தேசிகன் எவ்வளவு ஆக்ரஹத்தோடே இந்த ஸம்ஸ்க்ருத த்ராவிட ஸூக்திகளை எழுதியிருக்கிறார் தெரியுமா? இவர்களை நேரில் கண்டால் மண்டை கிழியப் புடைத்திருப்பாரல்லவா?

மங்களம்:-ஸ்வாமிந் இப்படி தேவரீர் ஸாதிப்பது வியப்பாயிருக்கிறது; உம்மவர்களெதிரில் இப்படி ஸாதிக்கமுடியுமா?

கருட:-அவரவர்கள் யாரை வஞ்சித்தாலும் தத்தம் மனஸ்ஸை வஞ்சிக்கமுடியுமா? ஸ்வாமி தேசிகன் ந்யாஸதிலகத்தில் *உக்த்யா

acharya.org

தநஞ்ஜய ச்லோகத்தில்-"ச்ருத்வா வரம் என்றவுடனே *ததநுபந்தமதாவலிப்தே" என்றருளிச்செய்திருப்பதைக் கணிசிப்பாரில்லையே! பகவத் ராமாநுஜாநுபந்திகளுக்கே வாய்த்தது அந்த வரம்" என்று விளங்கவில்லையா? இல்லையாகில்இங்கு *ததநுபந்தே" த்யாதிக்கு என்னப்ரஸக்தி? எம்பெருமானோரோடு அநுஸ்யூதமான ஸம்பந்தமில்லாதார்க்கு அப்பேறு அரிதேயென்று அறுதியிடத்தட்டுண்டோ? கோபால தேசிகன் காலத்திற் கோவில் சண்டைக்கெளரே வந்து புகுந்த நவீனர்களுக்கு ததநுபந்த ப்ரஸக்தி லவலேசந்தானுண்டோ? இவ்விஷயத்தில் அடியேன் இன்னமும் பிரபஞ்சனம் செய்யவேணுமோ? "பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளியங்கிளை தொற்றவேணும்" என்கிற வசனத்தை கோஷ்டீபுரம் ஸ்வாமி பலகால் ஸாதிக்கக் கேட்டிருக்கிறேன். ஒன்று கேளீர்;

ஸ்ரீகோஷ்டீபுரம் ஸ்வாமியென்று ப்ரஸித்தாக எழுந்தருளியிருந்த அவர், கோயிலில் பலவாண்டுகள் வாழ்ந்து ஸ்ரீமதுபய வே. எம்பார் கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி பக்கலில் கதாதரீயாதி வாதக்ரந்தங்களை வாசித்தது மட்டுமல்லாமல் ஸ்ரீ வசநபூஷண மீமாம்ஸாபாஷ்ய ரஹஸ்யத்ரய மீமாம்ஸாபாஷ்யாதிகளையும் ஸேவித்து ப்ரவசநமும்செய்து வந்தனர். அவர் ஸ்வாமி தேசிகனுடைய கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷையில்

"முக்தவ்யாபாரந்யாயேந ஸ்வயம் ஸ்வாதுத்வாத்
க்ஷணிகஸ்ய காலாந்தரபாவிபலஸாதநத்வ அநு
பபத்திதர்சநாச்ச நாஸ்ய ஸ்வவ்யாபாரே
மோக்ஷோபாயதாபுத்திரபி ஸ்யாதிதி பாவ:"

என்றுஸாதித்திருப்பதைத் தமது திருத்தகப்பனாரான ஸ்ரீஸுந்தர கோபாலாசாரியர் ஸ்வாமி எடுத்துக்காட்டி "தேசிகன் பிள்ளை லோகாசார்யர் திருவடிகளில் பலகாலம் பழுக்கஸேவித்திருந்தாலன்றி இவ்வளவு தெளிவாகஸாதித்திருக்க முடியாது என்று அடிக்கடி ஸாதிப்பர் என்ற கருட்புரம் ஸ்வாமியின் நிகமனம். தேசிகனுடைய கத்யஸ்ரீஸூக்திகளில் இந்த ரக்ஷா ஸ்ரீஸூக்தியும், பத்யஸ்ரீஸூக்திகளில் 'த்ராணே ஸ்வாமித்வ மௌசித்யம் ந்யாஸாத்யாஸ் ஸஹகாரிண:, ப்ரதாநஹேது: ஸ்வாதந்த்ர்ய விசிஷ்டா கருணா விபோ:' என்கிற காரிகையும் நவீனர்களுக்கு இரண்டு க்ரகசங்கள் என்றும் ஸாதிப்பர்.

acharya.org

— உபஸம்ஹாரம். —

அத்தகரின் ஏழெட்டு ஏடுகளான அபத்தச்சுவடி இன்று நமது கண்ணில் பட்டதும், அதை நாம் வாசிக்க நேர்ந்ததும் பிரபலமான பாபராசியின் பலனேயென்னவேணும். இவ்வபத்தச் சுவடியில் ஸ்ரீலோகாசார்ய ஸ்ரீவரவரமுநீந்த்ரர்களை தூஷித்திருப்பது மட்டுமன்று; ஸ்ரீமத்யாமுநார்ய பகவத்ராமாநுஜார்யதூஷணமே அபரிமிதமானது. "அநுக்ருத்ய பூர்வபும்ஸ:" என்று பட்டர் ஸாதித்தகணக்கிலே ஆளவந்தார் "நிஹீநாசாரோஹம் ந்ருபசுரசுபஸ்யாஸ்பதமபி" என்று ஸாதித்ததை அடியொற்றி மணவாளமாமுனிகள் "வ்ருத்த்யா பசுர் நரவபுஸ்த்வஹம்" என்று பணித்தார். ஆளவந்தார் பணித்தது மெய்யாகில் இதுவும் மெய்யாகிறது. "யத்ரோபயோஸ் ஸமோ தோஷ: பரிஹாரோபிவா ஸம:" என்பதை இந்த யுதாஜாதர் அறியகில்லார்.

"இந்த அபத்த அஸம்பத்தங்களெல்லாம் ஒரு தென்கலை வ்யக்தியாலே எழுதப்பட்டனவென்று உலகம் நினைக்கட்டும்" என்று சுவடியின் தலைமேல் தென்கலைத் திருமண்காப்பை விளங்கவைத்துள்ளார். இத்தகைய விஷமசேஷ்டைகளாலே "ஆர்ஜவத்தோடு ஒரு கேள்விக்கும் விடையிறுக்க மாட்டாதவரிவர்" என்பது சிலாலிகிதமாகுமேயொழிய வேறொன்றும் தேருது. இந்த அக்கிலிபிக்கிலி அஸமஞ்ஜஸக்குடுக்கை மணப்பாக்கம் ஸ்வாமியென்று தொடங்கியெழுதுகையில்–'திருவரங்கத்தின் பெயரை யெடுக்கும் போதே தமக்கு வயிற்றெரிச்சல் கிளம்புவதாக அந்தோ! வெட்கமற்றெழுதியுள்ளது. ஸ்ரீரங்கநாச்சியார்ஸன்னிதிக்கெதிரே இடம்பெற்றஸ்வாமியின் திருவாசற்கொடுங்கையில் ஜ்வலிக்கும் திருமண்காப்பை ஸேவிக்கும் போதெல்லாம் வயிறெரியாமலும் குடல்குமுருமலுமிருக்குமோதான்? அதற்கடுத்தபடி எழுதுகிறது இந்த அசட்டுக் குடுக்கை-'பாழாய்ப்போன திருமங்கை மன்னன் தையலார் குழலென்று வருணித்திருக்கிறராம்; ஐயோ கருமமே! பாசுரங்களுக்கு இப்படியும் ஒருகொலையா? தையலார் குழல்மாலையுமென்று எந்தபாழாய்ப் போன ஆழ்வார் எங்கே பேசியிருக்கிறார்? என்று கேட்டால் பெப்பே பெப்பேளென்று விழிக்கும் திருக்கோலத்தைச் சேவிக்கலாம் "அரங்கத்தின் பெயரை யெடுத்தாலே தலையும் தொங்கிப்போய்விடுகிறது" என்று வெட்கமற்றெழுதுவதும் வியப்பே. எடுத்துப் பாருங்கள்.

இதற்குமேல் பெரியதொரு வியப்பைக்கேண்மின்:–"அரங்கத்தில் வாழ்பவர்கள் காமலோகப்ரவணர்கள்" என்றெழுதுகிறரிவர் அங்கேயே:

acharya.org

இந்திரலோகம் சந்திரலோகம் இத்யாதிகள் கேட்டதுண்டு; காம லோகம் இனி இவரிடந்தான் கேட்டுணரவேண்டும். அரங்கத்தில் வாழ்பவர்கள் என்று விசேஷித்திருக்கையாலே காமலோகம் புகவே இவர் அரங்கவாழ்ச்சியைக் கொண்டார் போலும்.

மிகமிகத் தலைவேதனையாக ஒன்றெழுதுகிருர்—"காஞ்சியிலிருந்து வேதாந்ததேசிகனை வரவழைத்து அவர் செய்த உபகாரத்தைக்கூட சிந்தித்துப் பார்க்காமல் அவர்மீது பாதரக்ஷாப்ரயோகம் செய்யத் துணிந்தனர் அரங்கத்தார்" என்று. சாந்தம் பாபம்! சாந்தம் பாபம்!! இப்படிப்பட்ட அபசரிதங்களைச்செய்ய இவருக்கு மிக்க ஆசைபோலும். இல்லையாகில் இப்படி யெழுத ஒருகாலும் கைவராது. "க்வசந ரங்க முக்யே விபோ! பரஸ்பரஹிதைஷிணாம் பரிஸரேஷு மாம் வர்த்தய" (அபீதிஸ்தவே) பரஸ்பரஹிதைஷிகளென்று ஸ்வாமி தாம் புகழ்ந்து பேசும் ஸ்ரீரங்க வாஸிகள் நெஞ்சாலும் நினைக்கமாட்டாததை, அக் காலத்தில் ஸ்ரீவைஷ்ணவத்வேஷிகளாயும் (விசிஷ்ய) தேசிகத்வேஷி களாயுமிருந்த இவருடைய தாயாதிகளே அது செய்திருக்க வேண்டும். ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம். அன்று தொடங்கி இன்று வரையில் பரம பரிசுத்தமாய் ப்ரதிபடச்ரேணி பீஷணமாய் விளங்குகின்ற திருவரங்கம் பெரியகோயிலில் ஸ்வாமி வேதாந்தாசாரியருடைய திவ்யமங்கள விக்ரஹம் எங்ஙனே ப்ரதிஷ்டிதமாயிருக்கிறதென்று பரிசீலிக்க இந்தப் பேதைக்கு மூளை(அதாவது களிமண்) இல்லையே. திருவிந்தளூர் திருவல்லிக்கேணி முதலிய திவ்யதேசங்களையுமெடுத்துக்கொள்வோம்; இவர்கள் தேசிகனோடு உறவுகொண்டாட ஆரம்பித்தது என்றைக்கு? என்பதை நிர்ணயிப்பதில் சிரமமுண்டோ? என்றைக்கு பாஹ்ய பூமிகளில் அவர்க்குக் கோயில்கட்ட ஆரம்பித்தார்களோ, அன்றைக்குத்தானென்று பாலிசனும் அறுதியிடுவன். ஸ்வாமிக்கு அவஜ்ஞைகளை வீணாக விளைக்கத்தானே இவர்கள் அவரோடு உறவு கொண்டது. கைப்புண்ணுக்குக் கண்ணாடிவேணுமா? "இங்குப் புகேல்மின் புகேல்மின் எளிதன்றுகண்டீர் புகேல்மின்" என்று ஆண்டுதோறும் பரிபவப்படுவது எதனாலே என்று கண்டறிய மதியில்லையே! ஆக, பாதரக்ஷா ப்ரயோகம் பண்ணினதாக இவர்கள் எழுதியிருப்பது யாரைநோக்கி யென்பது விளக்கமாயிற்று. 600, 700 வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர்களும் உலகம் போற்ற நிற்பவர்களுமான மஹாசார்யர்களைக்குறித்து இங்ஙனே அஸஹ்யங்களான கதைகளை எழுதி இவர் ஏடுகளைப் பூரிப்

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

பது. இவரது பிராயத்திற்கும் வேஷத்திற்கும் சிறிதும் பொருந்தாது. "தேசிகன் செய்தருளும் ச்ராத்தத்தில் நிமந்த்ரிதர்கள் வஞ்சித்தார்கள்; திருவடிகளைப் பிடித்திழுத்துத் தெருவிலே தள்ளினர்கள். பாதரக்ஷையாலே.........." என்றிப்படியெல்லாம் இவரைச் சேர்ந்தவர்கள்வைபவ நூலென்று எழுதி அச்சிட்டும் வைத்திருப்பவைகளை இவர் நித்ய பாராயணம் பண்ணிப் போதுபோக்கட்டும்.

ஆசார்யாபசார ஸார்வ பௌமரான இவர் துச்சநிந்தைகளினுல் க்ருதக்ருத்யராகப் பார்க்கிருர். இந்த நிந்தைகளினிடையிலே இரண்டொரு கேள்விகளுக்காவது விடை யிறுத்திருக்கலாம். உலகத்தில் எல்லாருமேயா நிந்தைகளினுல் த்ருப்தி யடைபவர்களா யிருப்பர்கள்? பண்டிதர்கள் யாரோ சிலர்இருந்தாலும் இந்த சூதைக்கண்டறிவதற்கு இருகலையாரிலும் ஏராளமாக வுள்ளார்கள். 'அசக்தா உத்தரம் வக்தும்' 'அசக்தாஸ் தத்பதம் கந்தும்' இத்யாதி வசனங்கள் இவரைப்போன்றவர்களுக்காகவே யன்றோ தோன்றியுள்ளன. இவரே ஆலோசித்துப் பார்க்கட்டும்; மணவாளமாமுனிகளையும் பகவத்பாஷ்யகாரரையும்நிந்திப்பது தவிர தமது சுவடியில் ஒரு ஸத்விஷயமுண்டாவென்று. இப்படியே காலத்தைக் கழிக்கின்ருர், கழிக்கட்டும் ....

இவர் ஆசார்யாபசாரங்கள்படுவதற்காக, பிரதிசெய்யும் மஹாபாபம் நமக்கு வேண்டா; இராவணன் பிராட்டியை அபஹரித்தானென்று மந்தோதரியைக் கொண்டுபோக ஒரு வானர வீரர்க்காவது தோன்றிற்ரே? இன்று இவரது நிந்தைக் கந்தையிலே போது போக்கின பாபம் தீர மணவாளமாமுனிகளின் வைபவ ஸாகரத்தில் சில திவலைகளைப் பருகிக்களிப்போம். (அதாவது) இரண்டு சுலோகரத்நங்களாலே க்ருதக்ருத்யராவோம்.

ஸூராஹாராஸாரீகரண சணயத்ஸூக்திலஹரீ-
கரீயஸ்தாம் ஸ்தோதும் ப்ரபவதி ந வாசஸ்பதிரபி.
ஸ நஸ் தந்யாத் அந்யாத்ருசமஹிமசாலீ வரவரோ
முநீந்த்ரோ நிஸ்தந்த்ர: குசலமநுவேலம் குருவர:

த்ராக்ஷாமதிக்ஷிபதி நிந்ததி மாகரந்த-
தாராம் ஸுதாரஸஜரீம் அதரீகரோதி,
யத்ஸூக்திகல்பலதிகா தமஜஸ்ரமீடே
ஸௌம்யோபயந்த்ருயமிநம் யதிஸார்வபௌமம்.

ஆஸ்திகஸமாராதநம் முற்றிற்று.

acharya.org
Released by Maran's Dog ,Toronto, Canada